1996 பிப்ரவரி 20]

ஏற்பட்டிருக்கிறது. எனவே அதை ஒரு குறையாக எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போல மனநோயாளிகளைப் பொறுத்த வரையில் ஆங்காங்கே எங்கே இருந்தாலும் அவர்களை மருத்துவ மனைக்கு கொண்டு வந்து சேர்த்து விட்டால், அதற்கு பின்னாலே அவர்களை பராமரிக்க முழு பொறுப்பை நாம் ஏற்றுக்கொண்டுதான் இருக்கிறோம். இது நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் கொண்டு வந்து சேர்க்கிற பொறுப்பு சொந்தக்காரர்களைச் சார்ந்ததாக இருக்க வேண்டும். இல்லையென்றால் யாராவது பொதுநலவாதிகளாக இருக்க வேண்டும். அல்லது காவல் துறை கூட அந்த காரியத்தை செய்வதற்காக நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். எனவே, அந்த அளவுக்கு கொண்டு வந்து சேர்த்து விட்டால் வெளியே அனுப்பாமல் எவ்வளவு காலத்திற்கு சிகிச்சை தேவையோ - 10 ஆண்டுக்காலம், 15 ஆண்டுக்காலம் கூட இருக்கிறார்கள். இங்கேயே இருந்து தங்களுடைய வாழ்க்கையை முடித்துக்கொள்கிற அளவுக்கு கூட பலபேர் தொடர்ந்து இருந்து வருகிறார்கள். எனவே அப்படி எந்த அளவுக்கு வேண்டுமானாலும் அவர்களுக்கு பராமரிப்பைக் கொடுப்பதற்கு நிச்சயமாக இந்த அரசாங்கம் எவ்வளவு பணம் வேண்டுமானாலும் இதைப்பொறுத்தவரையில் செலவழிக்க தயாராக இருக்கிறது. காரணம் அவர்கள் குழந்தைகளுக்கு சமமாக மதிக்கப்படுகிற காரணத்தால் அவர்களை பராமரிக்கிற முழு பொறுப்பையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. எனவே கொண்டுவந்து சேர்க்கிற பொறுப்பை ஆங்காங்கே இருக்கிறவர்கள் எடுத்துக்கொண்டால் அரசாங்கம் இந்தப் பணியைச் செய்வதற்கு தயக்கம் எள் அளவும் காட்டாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 64, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர்.

64—

நெல் கொள்முதல் நிலையங்களில் பிடித்தம் செய்தல்

***20769**—திரு. ஆர். சிங்காரம்:*

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெல் கொள்முதல் நிலையங்களில் மூட்டைக்கு இவ்வளவு என்று நிர்ணயம் செய்து பிடித்தம் செய்வதை நிறுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1996 பிப்ரவரி 20

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், உணவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்தில் நெல் கொள்முதல் நிலையங்களில் நம் விவசாயிகள் தங்களுடைய நெல்லை கொண்டு போய் கொடுக்கிறபோது அதில் காய்ச்சப்பாடு இல்லை, பதராக இருக்கிறது என்று பல காரணங்களைச் சொல்லி ஒரு மூட்டைக்கு ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் - சில இடங்களில் 4 ரூபாய், 5 ரூபாய் கூட வாங்கி விடுகிறார்கள். அதை நேரடியாகச் சொன்னால் நன்றாக இருக்காது என்பதற்காகத்தான் பிடித்தம் செய்கிறார்கள் என்று வினாவில் போட்டிருக்கிறேன். ஆகவே அது குறித்து சொல்லும்போது அப்படி வாங்கக்கூடாது என்று அரசு உத்தரவு இருக்கிறது. ஆனாலும் எங்கே பார்த்தாலும் இந்த நிலை ஏற்பட்டு இருக்கிறது. தற்போது தனியார் இடங்களில் நெல் விலை அதிகமாக இருப்பதால் நம்முடைய இந்த கொள்முதல் நிலையங்களில் நெல் அதிகமாக வருவதில்லை. அதற்கு இதுவும் ஒரு காரணம். ஆகவே, இதைக் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஜெனரல் இன்ஸ்ட்ரக்சன் ஆக, சீரியசான இன்ஸ்ட்ரக்சன் கொடுத்து, இதுபோன்று யாரும் செய்யக்கூடாது என்பதற்கு, உத்தரவு பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால், கொள்முதல் செய்யப்படும் நெல்லின் தரம் இந்திய அரசின் கொள்முதல் அடிப்படையை வைத்துத்தான் நிர்ணயிக்கப்படுகிறது. அந்த நிர்ணயங்களுக்கு ஏற்ப, கனிமப் பொருள், கரிப்பொருள் போன்ற அந்தச் சேதங்களை எல்லாம் வைத்துத்தான் கொள்முதல் செய்யப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதாவது தவறுகள் எங்கேயாவது ஏற்படுமானால், அதைக் கோடிட்டுக் காட்டுவார்களானால் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப் புகார் கொடுக்கப் போனால், உங்களுடைய நெல்லை நாங்கள் எடுத்துக் கொள்ள முடியாது என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையும் விவசாயிகளுக்கு தர்மசங்கடமும் ஏற்படுகிறது. ஆகவேதான் தனிப்பட்ட புகார் என்று வருவதைவிட, மொத்தமாக நீங்கள்

1996 பிப்ரவரி 20]

இன்ஸ்ட்ரக்சன் கொடுத்துவிடவேண்டும். நான் சொல்வது ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டுமல்ல. தமிழகத்தில் எல்லாக் கொள்முதல் நிலையங்களிலும் இப்படிப்பட்ட நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. ஆகவேதான், நான் இதை கன்வின்சிங்காக உங்கள் மத்தியிலே கேட்டுக் கொள்கிறேன். குறிப்பிட்டுச் சொல்லவேண்டும் என்று சொன்னால், என்னுடைய பேராவூரணி தொகுதியிலே பல்வேறு இடங்களிலே இருக்கிறது. நான் எழுதிக் கொடுத்துவிட முடியும். ஆனால், தமிழகம் பூராவும் அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டு இருக்கிறது. இந்த அரசின் மீது அக்கறையும், ஆர்வமும் கொண்ட நான், இந்தத் தவறுகூட நடந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான், நல்ல எண்ணத்தோடுதான் சொல்கிறேன். எல்லாக் கொள்முதல் நிலையங்களுக்கும் இந்தச் செய்தி போய்ச் சேருகின்ற வகையில்—யாரும் இது போன்ற தவறுகளைச் செய்யக்கூடாது என்பதற்காக—நீங்கள் அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில், அப்படி நீங்கள் குறிப்பிட்டு எழுதித்தான் தரவேண்டும் என்று சொன்னால், நான் எழுதிக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, இதற்கு ஒரு சீரியசான, சின்சியரான அறிக்கையை அனுப்பி வைக்க அரசு முன்வருமா என்று மீண்டும் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்:- பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் தக்க நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:- வினா எண் 65, திரு. எம். கே. பாலன், இருக்கையில் இல்லை.

வினா எண் 66, திரு. ஏ. கே. சி. சுந்தரவேல், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

66—

அரசுப் பணியாளர்களுக்கு குடியிருப்புகள்

** 47459—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:*

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் நகரில் அரசுப் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது ?